**தமிழ்நாட்டின் முதல் இயற்கை எரிவாயு விநியோக நிலையத்தை (Mother Station) தொடங்கும் AG&P பிரதம்**

*இப்புதிய நிலையம், பாதுகாப்பான மற்றும் நம்பகமான வழிமுறையில் தூய்மையான மற்றும் விலை மலிவான எரிபொருள் வசதியை ராமநாதபுரம் மாவட்டத்திற்கு வழங்கும்*

**ராமநாதபுரம், 22 ஜனவரி 2021:** உலகளவில் மிக பிரபலமான டவுன்ஸ்ட்ரீம் LNG மற்றும் கேஸ் லாஜிஸ்டிக்ஸ் நிறுவனமான AG&P, ராமநாதபுரத்தில் அதன் AG&P பிரதம் பிராண்டின் கீழ், தமிழ்நாட்டில் முதல்முறையாக நிறுவப்படும் இயற்கை எரிவாயு விநியோக நிலையம் (Mother Station) தொடங்கப்படுவதை இன்று அறிவித்திருக்கிறது. வாலாந்தரவை – ல் அமைக்கப்பட்டுள்ள இப்புதிய விநியோக நிலையம், அருகிலுள்ள கெய்ல் எரிவாயு சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து நேரடியாக இயற்கை எரிவாயுவை பெறும் மற்றும் அதன் பிறகு மாவட்டம் முழுவதிலும் உள்ள CNG நிலையங்களுக்கு வர்த்தக டிரக்குகள் வழியாக விநியோகிக்கப்படும். தூய்மையான, விலை குறைவான எரிபொருளை பொதுமக்கள் உடனடியாகப் பெற இந்த வெர்ச்சுவல் பைப்லைன் ஏதுவாக்கும்.

தமிழ்நாட்டில் PNGRB ஆல் அறிவிக்கப்பட்டுள்ள 12 மாவட்டங்களில், 6 மாவட்டங்களுக்கு AG&P பிரதம் சேவையினை வழங்கும். காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் ஆகியவற்றோடு ராமநாதபுரம், ஆகியவை இம்மாவட்டங்களாக இதன் சேவையைப் பெறும். ராமநாதபுரத்தில் 1500 SCMH திறன் கொண்ட லைன் பூஸ்டர் மற்றும் 1200 SCMH திறன் கொண்ட ஒரு CNG கம்ப்ரஸர் உடன் அமைக்கப்பட்டுள்ள AG&P பிரதம் விநியோக நிலையம், 24/7 என்ற முறையில் ஆண்டு முழுவதும் செயல்படும். சேவை வழங்கப்படும் மாவட்டங்களுக்கு நம்பகமான முறையில் CNG எரிவாயு வழங்கப்படுவதை உறுதிசெய்ய HPCL, BPCL, IOCL ஆகிய பார்ட்னர் நிறுவனங்களுடனும் மற்றும் OEMs, ரெட்ரோ.ஃ.பிட்டர்ஸ் நிறுவனங்களுடனும் AG&P ஒத்துழைப்புடன் நெருக்கமாக செயலாற்றும். AG&P பிரதம் - ன் விநியோக நிலையம் முதலில் CNG நிலையங்களுக்கு கம்ப்ரெஸ்ட் இயற்கை எரிவாயுவை (CNG) வழங்கும். இதன்மூலம் டீசல் மற்றும் பெட்ரோல் போன்ற அதிக விலையுள்ள மற்றும் பெருமளவு மாசுபடுத்தும் எரிபொருட்களுக்கு மாற்றாக உயர்தரமான, தூய்மையான எரிபொருளைப் பெற்று பயன்படுத்துவதற்கு வாகனங்களுக்கு இது வழிவகுக்கும்.

**தமிழ்நாடு, ஆந்திரபிரதேஷ் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களுக்கான AG&P – ன் தலைமை நிர்வாக அதிகாரி திரு. மனீஷ் கோஸ்வாமி,** விநியோக நிலையம் தொடக்க விழாவில் பேசியபோது, "தமிழ்நாட்டின் முதல் இயற்கை எரிவாயு விநியோக நிலையம் (Mother Station) தொடங்கப்படுவதை அறிவிப்பதில் நாங்கள் கௌரவமும், பெருமிதமும் கொள்கிறோம். இம்மாவட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்த CNG கட்டமைப்பை நிறுவுவதற்கு பெரும் ஆதரவை வழங்கிய தமிழ்நாடு அரசு மற்றும் உள்ளூர் நிர்வாக அமைப்புகளுக்கு எங்களது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். எமது விநியோக நிலையம், AG&P பிரதம் - ன் நகர எரிவாயு வினியோக வலையமைப்பிற்கு ஆதாரமாக திகழ்வதோடு, இம்மாநிலத்தில் தூய்மையான எரிபொருளுக்கு அதிகரித்து வரும் தேவையை எதிர்கொள்ளவும் பிற CGD எரிவாயு உட்கட்டமைப்பு நிறுவனங்களுக்கும் இயற்கை எரிவாயுவை வழங்கும்," என்று கூறினார்.

கார்கள், ஆட்டோ-ரிக்ஷாக்கள் மற்றும் பேருந்துகள் மற்றும் டிரக்குகள் போன்ற கனரக போக்குவரத்து வாகனங்கள் உட்பட, ஏறக்குறைய அனைத்து வாகனங்களிலும் CNG – ஐ பயன்படுத்தலாம். பிற பாரம்பரியமான எரிபொருட்களை விட CNG அதிக பாதுகாப்பானதாகவும் இருக்கிறது. நச்சுத்தன்மை அல்லாதது மற்றும் காற்றை விட லேசானது. எனவே விரைவில் காற்றில் கலப்பதால் சுலபமாக தீ பிடிக்காது. சிறப்பான எரிபொருள் திறன், கணிசமாக மேம்படுத்தப்பட்ட மைலேஜ், பராமரிப்பு செலவுகள் குறைப்பு ஆகிய ஆதாயங்களையும் CNG வழங்குகிறது. CNG – ஐ எரிபொருளாகப் பயன்படுத்தும் ஆட்டோ ரிக்ஷாக்கள், டாக்ஸிகள் மற்றும் வாடகை கார் நிறுவன உரிமையாளர்கள், அவர்களது சேமிப்பு மற்றும் வருவாயில் 55% வரை அதிகரித்ததாக தெரிவித்துள்ளனர். ஏசி மற்றும் ஏசி பொருத்தப்படாத இருவகை மாடல்களுக்கும் இது பொருந்தும்.

2018 ஆம் ஆண்டில், நகர எரிபொருள் விநியோக (CGD) செயல்பாட்டிற்காக PNGRB, தமிழ்நாட்டில் ~14500 சதுர கி.மீ. பரப்பை உள்ளடக்கிய ராமநாதபுரம், காஞ்சிபுரம் மற்றும் வேலூர் மாவட்டங்களில்

CGD நெடர்ஒர்க்கினை உருவாக்க பிரத்யேக உரிமத்தை AG&P – க்கு வழங்கியது. இந்த உரிமங்களின் கீழ் 8 ஆண்டுகளுக்கு இயற்கை எரிவாயுவை AG&P பிரத்யேகமாக விற்பனை செய்யும் மற்றும் அதன் CGD கட்டமைப்பு வசதிகளை 25 ஆண்டுகளுக்குப் பிரத்யேகமாக இயங்கும். ராமநாதபுரம் மாவட்டத்தில் AG&P இரண்டு CNG நிலையங்களை ஏற்கனவே தொடங்கியிருக்கிறது மற்றும் 2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் தமிழ்நாட்டில் இன்னும் 30 நிலையங்களைத் தொடங்க இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

#முடிவுற்றது#

**AG&P பிரதம் குறித்து**

AG&P பிரதம், இந்தியா என்பது, உலகளவில் பிரபலமான டவுன்ஸ்ட்ரீம் LNG மற்றும் லாஜிஸ்டிக்ஸ் நிறுவனங்களுள் ஒன்றான சிங்கப்பூரை தளமாக கொண்ட AG&P குழுமத்தின் சிட்டி கேஸ் டிஸ்ட்ரிபியூஷன் (CGD), பிரிவாகும். மின்உற்பத்தி நிலையங்கள், தொழிலக, வர்த்தக மற்றும் போக்குவரத்து துறைகள் மற்றும் இல்லங்கள் என அனைத்துப் பிரிவினருக்கும் இறுதிநிலை பயன்பாட்டாளர்களுக்கு எமது முனையங்களிலிருந்து LNG மற்றும் இயற்கை எரிவாயுவை நாங்கள் விநியோகித்து வருகிறோம். தமிழ்நாடு, ஆந்திரபிரதேஷ், கர்நாடகா, கேரளா மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் 31 மாவட்டங்களில் தினசரி பயன்பாட்டிற்கு பிரத்யேகமாக இயற்கை எரிவாயுவை வழங்க பெட்ரோலியம் & நேச்சுரல் கேஸ் ரெகுலேட்டரி போர்டு (PNGRB) அமைப்பால் வழங்கப்பட்டுள்ள 12 CGD உரிமங்களை AG&P கொண்டிருக்கிறது. குழாய்களின் மூலம் அனுப்பப்படும் இயற்கை எரிவாயுவை (PNG) இல்லங்கள், தொழிலக, வர்த்தக மற்றும் வர்த்தக நோக்கல்லாத மற்றும் வீடுகளல்லாத பிற வர்த்தக நிறுவனங்கள் (NDEC), ஆகியவற்றிற்கு வழங்குவதற்கும் மற்றும் வாகனங்களில் பயன்படுத்துவதற்கு கம்ப்ரெஸ்ட் இயற்கை எரிவாயுவை (CNG) வழங்குவதற்கும் இந்த பிரத்யேக உரிமைகள் அனுமதிக்கின்றன. இந்த CGD நெர்ஒர்க்கில் 278,000 சதுர கிலோமீட்டர்கள், 17,000 அங்குல-கி.மீ. பைப் லைன்கள் மற்றும் 1500-க்கும் அதிகமான புதிய CNG நிலையங்கள் உள்ளடங்கும்.

மேலும் கண்டறிய www.agppratham.com ஐ காணவும் மற்றும் AG&P பிரதம் - ன் அதிகாரப்பூர்வ சமூக ஊடகப் பக்கங்களை பின்தொடரவும்:
www.linkedin.com/company/ag-p-pratham/
www.facebook.com/agppratham/
www.instagram.com/agppratham/

**ஊடக தொடர்புக்கு:**

**எம்எஸ்எல் இந்தியா**

சரோஜினி உஜ்லயன்
முதுநிலை மேலாளர்
sarojini.ujlayan@mslgroup.com
+ 91 9810006148